# திராவிட சம்பத்து

கலைஞர் மு. கருணாநிதி

விற்பனையாளர்:

பாரி நிலையம்

59, பிராட்வே — சென்னை-1

முதல பதிப்பு
செப்டம்பர் 1951

விலை அணா மூன்று

வெளியிடுவோர் :

அறிவு மன்றம்
சென்னை-1

அன்பன் அச்சகம்,
சென்னை-1.

கொண்டிருக்கிறார் அந்த அய்யர். நான் சொன்னது உண்மையா அல்லவா என்பது தெரியும். தெரிந்த

பிறகு அந்த ஏனோதானோக்கள்--எங்கேயோ கிடந்தது கள்—இடந்தேடிகள் ஆகியவர்களிடம் சொல்லுங்கள் போய்ப்பார்க்கும்படி - அதோடு கீழுள்ளவற்றையும் கவனமாய்ப் படியுங்கள்.

சென்னைக் கடற்கரையில் பிரசிடென்சி கல்லூரி வாயிலில் இருக்கும் டாக்டர் உ. வே சாமிநாதய்யர் சிலையின் கீழே எழுதப்பட்டிருக்கும் வாசகங்கள்.

“மகா மகோபாத்யாய திராவிட வித்ய பூஷண டாக்டர் சாமிநாத அய்யர்” என்பவை!




பேரறிஞர்

ரூசோ

தீட்டிய

## 'ஜூலி'

விலை

ரூபாய் ஒன்று

---

மு. கருணாநிதி

தீட்டிய

# இன முழக்கம்

விற்பனையாகிறது

விலை அணா எட்டு

# திராவிட சம்பத்து

*

### அரசியல் நோயாளிகள்

கண்ணை மூடிக்கொண்டே படுத்திருப்பார்கள். திடுக்கென கத்துவார்கள் 'அய்யோ அப்பா' என்று! இப்படி சில அரசியல் நோயாளிகள் இருக்கிறார்கள். நான் நோயாளி என்கிறேன்; அதை அவர்கள் 'ஸ்டண்ட்' என்பார்கள், வாயை மூடி வாலைச்சுருட்டி உட்கார்ந்திருப்பது. எதிர்பாராத நேரத்தில் எழுந்து பாய்வது. அந்தப் பாய்ச்சலிலே பயன் இருந்தால் மேலும் மேலும் தாவுவது, இல்லாவிட்டால் பழைய படியே மரக்கிளையில் தொங்குவது, இது நமது அக்கிரஹாரத்தின் பிரதிநிதி—அம்மாமிகளின் அபிமானச் செல்வன் ஆனந்தவிகடனுக்குப் பழக்கமான சமாச்சாரம்.

### வால் ஆடுகிறது

தென்னாட்டுச் செல்வங்களைப் பற்றி எழுத ஆரம்பித்தது, நம்மீது ஒரு பாய்ச்சல் பாய்ந்திருக்கிறது.

திராவிட சம்பத்து! என்று தலைப்பு—அதிலே விகடனின் வால் விநோதமாக—விசித்திரமாக—விபரீதமாக ஆடுகிறது,

“மகிஷாசுர மர்த்தனியின் கதை ஒரு பழைய திராவிடக் கதையாக இருந்து புராணம் புகுந்திருக்கும் என ஊகிப்பது தவறாகாது”

இப்படி எழுதியிருக்கிறது முதலில். எனக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. நாம் படிப்பது ஆனந்தவிகடன் தானே என்று திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண்டேன்.

‘திராவிடக் கதைகளில் புராணம் புகுந்துவிட்டது’ இதைச் சொல்வது சாதாரண விஷயமா? அதுவும் விகடன், வேத விற்பன்னர்களின் ஏகக்குரல்—அது எழுதுமா இப்படி? எழுதியிருக்கிறது, எனவே வியப்படைந்தேன்,

‘திராவிடக் கதைகளில் புராணம் புகுந்துவிட்டது’ எவ்வளவு அற்புதமான உண்மை இதைச் சொன்னதற்காக எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறோம், நாம்.

**புராணம் புகுந்து விட்டது**

திராவிடக் கதைகளில் புராணம் புகுந்துவிட்டது. ஆமாம்; ராமாயணம் திராவிடக் கதை, ராமனுக்கும் ராவணனுக்கும் நடந்த போர் பற்றி எழுந்த திராவிடக் கதை, அதில் புராணம் புகுந்துவிட்டது என்று

# முக்கிய குறிப்பு

'திராவிட சம்பத்து' என்று தலைப்பிட்டு 'திராவிடத்தை கேலிச் சித்திரமாக்கிய அதே 'ஆனந்த விகடன் 20-5-51-ந்தேதி இதழ் 55-வது பக்கத்தில் 'புத்தக உலகம்' என்ற தலைப்பில், 'மதத்தின் மறுபிறப்பு, என்ற துணைத் தலைப்பில் புத்தகங்களின் விளக்கவுரை தரப்படுகிறது.

இதில் இரண்டாவது புத்தகமாக 'ஸ்ரீ சங்கர விஜயம்' ஸ்ரீ காமகோடி க்ரந்தாவளி என்ற நூலைப்பற்றி எழுதிய விளக்கத்தைக் கவனியுங்கள் :—

" பாரதியார் சொல்லுகிறார் தமது 'புனர் ஜன்ம'க் கட்டுரையிலே; 'நமது வேதம் நமது சாஸ்திரம், நமது ஜனக்கட்டு, நமது பாஷைகள், நமது கவிதை, நமது சிற்பம், நமது சங்கீதம், நமது நாட்டியம், நமது தொழில் முறைகள், நமது கோபுரங்கள், நமது மண்டபங்கள், நமது குடிசைகள்—இவை அனைத்துக்கும் பொதுப் பெயர் ஆரியசம்பத்து. ஆரிய திராவிட இன வேற்றுமைகளில் பாரதியாருக்கு நம்பிக்கையே இல்லையென்பது பிரசித்தம்.

பாரதியாரின் ஆரிய ஸம்பத்து பாரத தேசத்தின் பொதுவுடைமைதான். 'நமது வேதம்' என்று முத

லாவது ஸம்பத்தாகக் ... றுரே பாரதியார், அந்த வேத வேதாந்தம் ... து மூல ஸம்பத்து, மூல பலம். மாக்ஸ் முல்லர் போன்ற எத்தனையோ மேதாவிகள் இதை உலக அறிவுக் களஞ்சியத்திலேயே மூலஸம்பத்து என்று போற்றியிருப்பினும், இந்நாளில் இத் தென்கோடியில் வேத நிந்தனை வேதாந்த நிந்தனைகள், வீழ்ச்சி—முழக்கங்கள் எழுவது வருந்தத் தக்கதே.

இந்நிலையில் ஸ்ரீ காமகோடி பீடம் சங்கராச்சாரிய சுவாமிகளின் ஆசியும் ஆதரவும் கொண்டு சென்னையில் சமயத் தொண்டாற்றி வரும் ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்திற்கு நன் மக்களின் நன்றி உரியதாகும். இக் கழகத்தார் வெளியிட்டுவரும் ஸ்ரீ காமகோடி க்ரந்தாவளியில் 'ஸ்ரீ சங்கரவிஜயம்,' பொதுஜன ரம்யமான ஓரழகிய சிறு நூல். படங்களுடன் கூடிய இந் நூல், வேதாந்தத்திற்கே தென்னிந்தியாவிலிருந்து புனர் 'ஜன்மம் அளித்த ஆதி சங்கரரின் அருமை பெருமைகளைத் தமிழர் அனைவருக்கும் ஒருவாறு அறிவிக்கும் என்று நம்புகிறோம்.''

'' திராவிட சம்பத்து '' என்ற பகுதியில் (ஆ. வி. யில்) 'திராவிட சம்பத்து' என்றால் அப்படி ஒரு இனம் இருந்ததாகவோ, இருப்பதாக நாம் ஒப்புக்கொள்ளவில்லை. என்று குறிப்பிட்டு விட்டு, கடைசியாக 'உண்மையில் திராவிட சம்பத்து என்றால் திராவிட மொழி வழங்கும் பிரதேசத்திலே போற்றிப் பாதுகாக்கத் தக்க பெருஞ் செல்வம் என்று தான் பொருள்'' என்று முடிக்கிறது.

## மன்றத்தில்

'திராவிடம்', 'திராவிட நாடு' என்ற 'இனமுழக்கம்' இன்று எங்கும் முழங்கு கிறது, முழக்கப்படுகிறது. வீழ்ந்த இனம் வீறுகொண்டெழுந்து வாழ நினைத்திட்ட காரணத்தால், வீழ்ந்திட்ட காரணங்களை அடிப்படைக் கோளாறுகளை உணர்ந்திட்ட காரணத்தால். இத்தகைய 'இனமுழக்கம்' நடைபெறும் நேரத்திலே இதனுல் இழிவும் பழியும் உண்மையிலேயே தம்மைச் சேரும், சேர்கின்றது என்ற வீண் பீதியால், தம் மைத் தாமே, குறுகுறுக்கும் குற்ற நெஞ்சி னர், 'நாமில்லை' 'நாமில்லை' என்று ஓலமிடு கின்றனர். வேறு சிலர் 'திராவிடமாவது, ஆரியமாவது' ஒன்றுமே கிடையாது என்று உரக்கக் கோஷமிடுவதன் மூலம் அடிப்படை இலட்சியத்தையே இல்லாது ஒழித்துகட்டி விடலாமென்று கனவு காண்கின்றனர். சந்தர்ப்பம் நேர்ந்த போதெல்லாம், கட்டுரை யாளுலும், காலட்சேபமாளுலும், எது கிடைத்தாலும், திராவிட இன எழுச்சிக்கு எதிரிடையாக பயன்படுத்திக் கொள்கின் றனர்.

இவ்வித கட்டுரைகளிலே ஒன்று ஆனந்த விகடனில் 'தென்னாட்டுச் செல்வங்கள்', என்ற தொடர் பகுதியில் **20-5-51**-ல் 'திராவிட ஸம்பத்து' என்ற தலைப்பிலே வந்துள்ளது. இதனை நன்றாக அலசியிருக்கிறார் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்.

கலைஞர் மு. கருணாநிதியைப் பற்றி மக்களுக்கு அறிமுகம் செய்துவைக்கத் தேவையில்லை. 'திராவிட சம்பத்து' என்ற தலைப்பில் 'திராவிட சம்பத்திற்கே' உலை வைக்கும் உண்மையை வெட்ட வெளிச்சமாக்குகிறார்.

படியுங்கள் மேலே.

வணக்கம்.

**அறிவு மன்றத்தார்.**

ஆனால் மேலே கண்ட புத்தக விமர்சனப் பகுதிப் படி பாரதியார் கருத்தென்று கூறி, வேறு எதற்கோ விமர்சனம் எழுதும் முறையில் பாரததேசம் முழுதும் ஆரிய தேசம் அதன் மொழி, கலை, நாகரிகம் யாவும் ஆரிய சம்பத்து என்று எழுதுவது எந்த நீதிக்குச் சரி, செல்லும், எதற்காக இத்தகையவேண்டப்படாத விளக்கங்கள், தேவைப்படாத இடங்களிலே கூட. சிந்திக்க வேண்டுகிறோம். 'ஆரிய சம்பத்து—திராவிட சம்பத்து—இரண்டிற்கும் ஏன் இந்த பேதம்—வீண் விளக்கங்கள்.

'திராவிடம்' இல்லையெனறு கூறுவோர், திராவிட மொழியால், தமிழால் வளர்ந்து, வாழ்ந்த டாக்டர் உ. வே. சாமிநாதய்யரைப் பார்க்கட்டும் என்று அடுத்த கட்டுரையில் கலைஞர் கருணாநிதி சொல்வதைக் கேட்கட்டும்.

தொடருங்கள் மேலே.

**பதிப்பாளர்.**

# ஐயர் அறிவிக்கிறார் !

சென்னைக் கடற்கரையிலே நின்று கொண்டிருக்கிறார் அந்த ஐயர் போவார். வருவாரெல்லாம் அவரைப் பார்த்துப் போகிறார்கள். பூணூல் அணிந்தவர்தான். போட்டிருக்கும் சட்டைக்குள்ளே நூல் மறைந்திருக்கிறது அவ்வளவுதான், கடற்கரைப்பக்கம் வருகிறவர்களைப் பார்த்து, அவர், "நாட்டினரே ; நாட்டினரே ஒரு சேதி என்கிறார். அதோடு விடுவதில்லை அவர். "திராவிடம் என்றொரு சொல் உண்டு ; அது தித்திக்கும் தேன் மொழி கற்கண்டு" என்று பாடுகிறார். ஆச்சரியப் படுவீர்கள் நீங்கள்,

அய்யராவது திராவிடத்தை ஒத்துக் கொள்வதாவது என்று திடுக்கிடுவீர்கள். உண்மை நண்பர்களே உண்மை! அன்றைக்கு ஒரு நாள் நானும் என் நண்பர்களும் கடற்கரையில் அந்த அய்யரைச் சந்தித்தோம். மேலே சொன்ன பாடலை அவர் பாடினார் 'திராவிடம் 'திராவிடம்' என்று கூவினார் திராவிடம் என்றாலே தீயை மிதித்ததுபோலத் துள்ளும் "ஏனோதானோ" கட்சிக்காரர் ஒருவரும் அந்த அய்யரின் முழக்கத்தைக் கேட்டு விட்டுத் தலைகுனிந்துபோய் விட்டார்.

நீங்கள் உடனே சென்னைக் கடற்கரைக்குச் செல்லுங்கள். பிரசிடென்சி கல்லூரி வாயிலிலே நின்று

கூறினேம். அதை எதிர்த்த ...ள் ; இப்போது விகடன் கூறுகிறது...மகிஷாசுரமர்த்தனி என்ற திராவிடக் கதையில் புராணம் புகுந்துவிட்டது என்று !

நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறோம் ; தாமதமாக வாவது புத்தி வந்ததே என்று ! ஆனால் விகடன் அவ் வளவு பைத்தியக்காரனல்லவே......பழைய பழக் கத்தை அறவே விட்டுவிடவில்லை, கட்டுரையின் முடி விலே கொஞ்சம் விஷத்தையல்லவா கக்கியிருக்கிறான்.

**விஷம வேலை**

எங்கே திராவிடக் கதை என்று கூறுவதால் 'திரா விட நாடு' பிரச்சினைக்கு இடங் கொடுத்துவிடு வோமோ என்று பயந்துகொண்டு " திராவிட சம்பத்து என்றால் அப்படி ஒரு இனம் இருந்ததாகவோ இருக் கிறதாகவோ நாம் ஒப்புக் கொள்ளவில்லை."

விகடனின் விஷமத்தைப் பாருங்கள். " இன வெறிக்கொள்கை, ஒரு மித்' (Myth) 'அதாவது புரா ணக் கற்பனை என்கிறார்கள் இன்றைய விஞ்ஞான அறிஞர்களும் ஆராய்ச்சியாளரும்."

விஞ்ஞான அறிஞரை, ஆராய்ச்சியாளரை எதற் குப் பயன்படுத்துகிறார் கவனியுங்கள், விகடனார் ! இன வெறிக்கொள்கை ஆகாதென்கிறார்களாம் அறிஞர்கள். இந்த வார்த்தைகளை வைத்துக்கொண்டு நம் இன முழக்கத்தைப் பாழாக்கக் கனவு காண்கிறார் நகைச் சுவை குரங்கார் !

## இனவெறி—இனப்பற்று

இனவெறி கூடாதுதான் அதைத்தான் ஆரிய இனத்துக்கு அடிக்கடி சுட்டிக்காட்டி வருகிறோம். மனிதனைத் தொடக்கூடாது என்ற மமதையை—மகேஸ்வரனை நீதான் பூஜை செய்யவேண்டும் என்ற மண்டைத் திமிரை—இனவெறியை—விட்டுவிடு என்று கூறுகிறோம், நமக்கு ஏற்பட்டிருப்பது இனவெறியல்ல இனப்பற்று. இனவெறி...இன்னொரு இனத்தை அழித்து, அடக்கி தன் இனத்தை வளர்ப்பது. இனப் பற்று ..தன் இனத்தைப் பாதுகாத்து இன எழுச்சி ஏற்படுத்துவது.

முன்னது ஆரிய முறை. பின்னது திராவிடர் முறை. நம் முறை.

விஷமம் செய்ய எண்ணிய ஆரிய ஆஞ்சநேயர் முன்னுக்குப்பின் முரணில்லாமலாவது எழுதினரா என்றால் அதுவுமில்லை.

## ஆப்பசைத்த குரங்கு

முதலில் திராவிடக் கதையில் புராணம் புகுந்தது என்று நமது குரலில் பேசினர்.

பிறகு இனவெறிக் கொள்கை கூடாது என்று அவர் மொழியில் கர்ச்சித்தார்.

இறுதியில் அதற்கு ஆக்கந்தேடுவதற்காகப் புறப் பட்டு ஆப்பசைத்த குரங்காகிறார், பாபம்! " திராவிட

சம்பத்து என்று[illegible]ழி வழங்கும் பிரதேசத்தில் போற்றிப் பாது[illegible] தக்க பெருஞ்செல்வம் என்றுதான் பொருள்."

விகடரின் விளக்கம் போகும் போக்கு இப்படி! திராவிட இனத்தை மறுத்தவர்—அப்படி ஒரு இனம் இருந்ததில்லை என்றவர்—திராவிட மொழியை ஒத்துக்கொண்டு அது வழங்கிய பிரதேசததையும் ஒத்துக்கொண்டிருக்கிறார்.

## குப்பை மேட்டுக் குயில்கள்

ஆங்கில மொழி வழங்கிய இடம் ஆங்கிலநாடு, பிரஞ்சு மொழி வழங்கிய நாடு பிரான்சு நாடு. திராவிட மொழி வழங்கிய நாடு திராவிட நாடு என்பது ஏனோ தெரியவில்லை ஆனந்தவிகடருக்கு? தெரியாமலில்லை. தெரிந்தும் அதை மறைக்கும் தைரியம் இன்னும் கொஞ்சம் ஒட்டிக்கொண் டிருக்கிறது அவருக்கு! பிரதேசம், நாடு, இவற்றை விட்டுவிடுவோம். திராவிட மொழி பேசியவர்கள் திராவிடராய்த்தானே இருக்கவேண்டும் விகடரே, கிரேக்க மொழி பேசியவர்கள் கிரேக்கர் என்பது போல விகடரே! விஷமத்தனத்தால் உண்மைகளை விஷமாக்குவது உமது பரம்பரை வேலை. இப்போது நான் தந்த விளக்கத்தால் நீர் நாளைக்கே மரத்தைவிட்டு இறங்கிவிடுவீர் என்று நிச்சயமாக நினைக்கவில்லை. திராவிடம், திராவிட

மொழி. திராவிட [illegible] ல்லாம் கற்பனைக் கோட்டை என்று கத்[illegible]ள ; அந்த குப்பை மேட்டு குயில்களின் பேச்[illegible] பொதுமக்கள் ஏமாந்து விடக் கூடாதே என்பதற்குத்தான் இதைச் சொல்ல நேரிட்டது. நீங்கள் போகலாம் வாலைச் சுருட்டிக் கொண்டு!

—